நகரமன்றம் குடியாத்தம் நாள் :08.03.019

# அறிவிப்பு

2019—ம் ஆண்டு மார்ச்மாதம் 8—ம் தேதிவெள்ளிக்கிழமைமுற்பகல் 11.00மணிக்குநகராட்சிஅலுவலகத்தில் உள்ளநகராட்சிதனிஅலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சிநிரலில் கண்டுள்ளபொருள்களைமுடிவுசெய்யநகரமன்றத்தின் அவசரக்கூட்டம் நடைபெறும்

**முன்னிலை: திரு.ச.செல்வபாலாஜி,பி.இ., நகரமன்றதனிஅலுவலர்**

# கூட்டநிரல்

13.இந்நகராட்சியில் சட்டஆலோசகராகஉள்ள திரு.கே.எம்.பூபதிஅவர்களின் பதவிக்காலம் முடிவடைந்துவிட்டதால் புதியதாகசட்டஆலோசகரைநியமனம் செய்யஅலுவலகம் மூலம் நடவடிக்கைஎடுக்கப்பட்டது. அதன்படிஇவ்வலுவலககடித எண்.அ1/1535/2011 நாள் : 09.02.2019—ல் புதியதாகநகராட்சிசட்டஆலோசகர் ஒருவரை மூன்று ஆண்டு காலத்திற்குநியமனம் செய்யகீழ்கண்டவழக்கறிஞர் சங்கத்தில் பதிவுசெய்துள்ளவர்களில் விருப்பமும், தகுதியும் உள்ளவழக்கறிஞர்களிடமிருந்துவிண்ணப்பம் மற்றும் அனுபவச்சான்றுபெற்றுஅனுப்பகோரப்பட்டது.

1. தலைவர், பார் அசோசியேஷன், குடியாத்தம்
2. தலைவர், அட்வகேட் அசோசியேஷன், குடியாத்தம்
3. தலைவர், லாயர்ஸ் அசோசியேஷன், குடியாத்தம்

கீழ்காணும் வழக்கறிஞர்களிடமிருந்துதனியார் மூலம் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

1. திரு.கே.எம்.பூபதி, எம்.எல்.,
2. திரு.கே.இளங்கோ, பி.எஸ்.சி., பி.எல்.,
3. திரு.எஸ்.கோதண்டன், பி.எஸ்.சி., பி.எல்.,
4. திரு.எம்.அசோக்குமார், எம்.ஏ.,பி.எல்., எம்.எல்.,
5. திருமதி.ஏ.புஷ்பலதா, எம்.ஏ.,பி.எல்., எம்.எல்.,
6. செல்வி.ஏ.ஜீவிதா, எம்.ஏ.,பி.எல்., எம்.எல்.,
7. திரு.வி.ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்., எம்.பி.ஏ.,

**அலுவலக குறிப்பு** :நகராட்சிசட்டஆலோசகராகநியமனம் செய்யவரப்பெற்ற 7 விண்ணப்பங்களைபரிசீலனைசெய்யமனறத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது. (ந.க.எண்.அ1/1535/2011)

**தனிஅலுவலர் / ஆணையர்,**
**குடியாத்தம் நகராட்சி.**

நகரமன்றம் குடியாத்தம் நாள் : 08.03.019

# அறிவிப்பு

2019–ம் ஆண்டு மார்ச் மாதம் 8–ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி,பி.இ., நகரமன்ற தனி அலுவலர்**

# கூட்ட நிரல்

1. இந்நகராட்சியில் SBM-IUDM 2018-2019 திட்டத்தின் கீழ் உள்ளி உரக்கிடங்கில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பான பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய்:320.00 இலட்சத்திற்கு 07.03.2019 அன்று இருஉறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்து அதனடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப்புள்ளிகள் 08.03.2019 அன்று திறக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | Construction of Fecal Sludge Treatment Plant in Ulli Compost Yard<br>**Estimate Amt:Rs.320.00 Lakhs** | 1. S.Sivakumar – 4.97% Above the Estimate<br>2. JKN Builders – 7.96% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளது. எனவே இவ்விரண்டில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரிடம் இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்:இ1/1056/2018 எழுத்து மூலம் மதிப்பீட்டுத் தொகையை விட குறைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கேட்கப்பட்டது. ஆனால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் தாம் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே பணியினைச் செய்வோம் என்ற பதிலினை தங்களது 08.03.2019 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

SBM-IUDM 2018-2019 திட்டப்பணி குறித்த காலத்தில் முடிக்கப்படவேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த சதவீதமும் மதிப்பீட்டைவிட கூடுதலாக கொடுத்துள்ள திரு.எஸ்.சிவக்குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

மேற்படி திட்டப்பணிக்கு அரசு ஒதுக்கீடு செய்யும் மான்யத்தொகைக்கு கூடுதலாக ஆகும் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், இத்தொகையினை 2019-20 திருத்திய வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/1056/2018

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடி திரு.கே.பழனிசாமி அவர்களின் இரண்டாண்டு சாதனைகள் தொடர்பாக இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டபணிகள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்தமைக்கு உண்டான செலவின தொகை ரூ.1,05,157/-ஐ கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. The Daily Thanthi | - | Rs.23100.00 |
| 2. Dinamalar | - | Rs.23100.00 |
| 3. Express Publication (Madurai)P.Ltd | - | Rs.23100.00 |
| 4. Malar Publication(P) Ltd | - | Rs. 9975.00 |
| 5. Kal Publication | - | Rs. 25882.00 |
| **Total** | **-** | **Rs.105157.00** |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/1589/2018

**தனி அலுவலர் / ஆணையர்,**

**குடியாத்தம் நகராட்சி.**